## ‘நான் முதல்வன்’ திட்டத்தில் பயின்று ஐ.ஐ.டி. – என்.ஐ.டி. போன்ற இந்தியாவின்

# முன்னணி கல்வி நிலையங்களில் சேர்க்கை பெற்று - தமிழ்நாட்டு மாணவ - மாணவியர் சாதனை!

## “உன்னத இமயமலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி ‘நான் முதல்வன்’ என்று இயம்பிடக் கேட்டிடும் இந்நாள்!” – வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!

**சென்னை, ஜூலை 14-**

**‘நான் முதல்வன்’ திட்டத்தில் பயிற்சி பெற்று அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள் - ஐ.ஐ.டி., என்.ஐ.டி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பயில தேர்வாகியுள்ளதைச் சுட்டிக் காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

**அதனையொட்டி முதல்வர் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், பாவேந்தர் பாரதிதாசனின் எழுச்சிக் கவிதை வரிகளை மேற்காட்டி, “உன்னத இமயமலை போல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி, “நான் முதல்வன்” என்று இயம்பக் கேட்டிடும் நாள், இந்நாள்!” என்று நெஞ்சம் நெகிழ்ந்துள்ளார்.**

அதுபற்றிய விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களை, படிப்பில் மட்டு மல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியா ளராக்கும் வகையில் திறன் மேம் பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டமாக “நான் முதல்வன்” என்கிற முன்னோ டித் திட்டத்தை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள், தமது பிறந்த நாள் அன்று தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டு இளைஞர்களும் மகளி ரும் கல்வியில், அறிவாற்றலில் செயல் திறனில் உயர்ந்து சிறந்து உலகில் முன்னிலை பெற வேண்டும் என்று விரும்பி, தமது கனவுத் திட்டமாக ‘நான் முதல்வன்’ திட்டத்தை முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

இன்று நான் முதல்வன் திட்டத்தால் பயனடைந்தவர்கள், ஒன்றிய அரசின் குடிமைப் பணித் தேர்வுகள் உட்பட அனைத்திலும் சாதனை படைக் கின்றனர்.

**பிரிட்டன் தொழிலாளர் கட்சித் தேர்தல் அறிக்கை!**

பிரிட்டன் நாடாளுமன்றத் தொழிலாளர் கட்சியின் தேர்தல் அறிக் கையிலும் ‘நான் முதல்வன்’ திட்டம் பிரதிபலித்து – இத்திட்டத்தின் பெருமை யைப் புலப்படுத்துகிறது எனின் அது மிகையல்ல.



ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர் களைப் படிப்பில், அறிவில், சிந்தனை யில், ஆற்றலில், திறமையில்

> **“இந்த மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்ட மானது, ஈராண்டுகளைக் கடந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று, வேலைவாய்ப்புகளையும் பெற்று வருகின்றனர்.”**

மேம்படுத்துவதே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான “நான் முதல்வன்” திட்டத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவி யர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அதனை மேலும் ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

“நான் முதல்வன்” திட்டத்தில் பயிற்சி பெற்று ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தனியார் துறைகளில் உயரிய வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

“நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் ஐ.ஏ.எஸ். , ஐ.பி.எஸ். உள் ளிட்ட குடிமைப்பணித் தேர்வுகளுக் கும் பயிற்சி பெற்று, பலர் தேர்ச்சியும் பெற்றுள்ளனர். குறிப்பாக கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவ, மாணவிகளின் கனவுகளை “நான் முதல்வன்” திட்டம் நனவாக்கி வருகிறது.

இந்த நிலையில், “நான் முதல்வன்” திட்டத்தில் பயிற்சி பெற்று அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள் ஐ.ஐ.டி., என்.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறு வனங்களில் பயிலத் தேர்வாகியுள்ள னர்.

**ராஜபாளையம் - பார்த்தசாரதி!**

விருதுநகர் மாவட்டம், ராஜபாளை யம் அருகே கணபதி சுந்தர நாச்சியார் புரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் சந்திரபோஸின் மகன் பார்த்தசாரதி, அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் படித்து, “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் இலவசப் பயிற்சி பெற்று ஜே.இ.இ. தேர்வில் வெற்றி பெற்றுள் ளார். அவருக்கு சென்னை ஐ.ஐ.டி. யில் இடம் கிடைத்துள்ளது.

சென்னை ஐ.ஐ.டி.யில் ஏரோஸ் பேஸ் இன்ஜினியரிங்கில் படிக்க சீட் கிடைத்துள்ளதற்கு தமிழ்நாடு அரசின் “நான் முதல்வன்” திட்டம் பேருதவி யாக இருந்தது என்றும், அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு தமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித் துக் கொள்வதாகவும் கூறியுள்ளார், மாணவர் பார்த்தசாரதி.



**விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் - கணபதி சுந்தரநாச்சியார் புரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரின் மகன் பார்த்தசாரதி!**

**துறையூர் - ரோகிணி!**

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே பச்சை மலையைச் சேர்ந்த மலை வாழ் இன மாணவி ரோகிணி, சின்ன இலுப்பூர் பகுதியில் உள்ள அரசு பழங் குடியினர் நல மேல்நிலைப்பள்ளியில் படித்து 12 வகுப்பில் 423 மதிப்பெண் கள் எடுத்தார். பொறியியல் படிப்பு படிப் பதற்காக ஜே.இ.இ. நுழைவுத் தேர்வு எழுதிய, அவர் 73.8 சதவீதம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இதன் மூலம் திருச்சி துவாக்குடி யில் உள்ள என்.ஐ.டி.யில் கெமிக்கல் இன்ஜினியரிங் படிக்கும் வாய்ப்பை அவர் பெற்றுள்ளார்.



**திருச்சி என்.ஐ.டி.யில் சேர்க்கை பெற்ற மலைவாழ் இன மாணவி ரோகிணி**

ரோகிணியின் படிப்புச் செலவு முழுவதையும் தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக மகிழ்ச்சியளிப்ப தாகத் தெரிவித்துள்ளார்.

**பழங்குடியின மாணவி வேலம்பட்டு - சுகன்யா!**

இதேபோல், சேலம் மாவட்டம், மேல்நாடு ஊராட்சிக்கு உட்பட்ட கரிய கோயில் வேலம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சுகன்யா என்ற மாணவி, உண்டு உறைவிடப் பள்ளியில் +2 படித்து, “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் இலவசப் பயிற்சி பெற்று ஜே.இ.இ. நுழைவுத்தேர்வில் மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளதோடு, திருச்சியில் உள்ள என்.ஐ.டி கல்லூரியில் சேர்ந்து படிக் கத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

“நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் தனது கனவு நனவாகியுள்ளது என தமிழ்நாடு அரசுக்கும், முதல மைச்சர் அவர்களுக்கும் அவர் நன்றி யினைத் தெரிவித்துள்ளார்.

“நான் முதல்வன்” திட்டத்தில் பயிற்சி பெற்று அரசுப் பள்ளி மாணவ, மாண விகள் ஐ.ஐ.டி., என்.ஐ.டி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பயில தேர்வாகியுள்ளதைச் சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பக்கத்தில் பதிவொன்றினை வெளியிட்டார்.

அப்பதிவு வருமாறு:-



**சேலம் மாவட்டம் - மேல்நாடு ஊராட்சி - வேலம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சுகன்யா**

**என்னருந் தமிழ்நாட்டின் கண்**
**எல்லோரும் கல்வி கற்றுப்**
**பன்னருங் கலை ஞானத்தால்,**
**பராக்கிரமத்தால், அன்பால்,**
**உன்னத இமய மலைபோல்**
**ஓங்கிடும் கீர்த்தி எய்தி**
**“நான் முதல்வன்” என்று**
**இயம்பக் கேட்டிடும் ‘இந்நாள்!’**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் உணர்ச்சி மேலிடக் குறிப் பிட்டுள்ளார்.

---

### பெருந்தலைவர் காமராசர் 121வது பிறந்தநாள்: திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# காமராசர் திருவுருவச் சிலைக்கு - அமைச்சர் கே.என்.நேரு மாலை அணிவிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி – ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*திருச்சி, ஜூலை 14-*

*திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைர மணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந. தியாக ராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளி யிட்ட அறிக்கை வருமாறு:-*

*பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 121வது பிறந்தநாளை முன்னிட்டு திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவரது பிறந்தநாளான நாளை 15.07.2024ம் திங்கட் கிழமை காலை: 8.00 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரு மான கே.என்.நேரு அவர்களின் தலைமையி லும், எங்கள் (க.வைரமணி, காடுவெட்டி ந.தியாக ராஜன், மு.அன்பழகன்) முன்னிலையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.*

*இந்நிகழ்ச்சியில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பா ளர்கள் கழக முன்னோடி கள், செயல் வீரர்கள் அனை வரும் தவறாது கலந்து கொண்டு கர்மவீரர் காமராசர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணி வித்து மரியாதை செலுத்திட வேண்டுகிறோம்.*

*இவ்வாறு அவ்வறிக்கை யில் குறிப்பிட்டுள்ளனர்.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.7.2024ம் தேதி இரண்டாம் கட்டமாக தருமபுரி மாவட்டம் பாளையம் புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஊரக பகுதிகளுக்கான மக்களுடன் முதல்வர் திட்டத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சி, வெள்ளோடு அண்ணமார் திருமண மண்டபத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு. மனீஷ், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு

# கும்பகோணத்தில் ‘பராசக்தி’ திரைக்காவியம் திரையிடல்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - மாநகரச் செயலாளர் சு.ப. தமிழழகன் பங்கேற்பு!

*தஞ்சாவூர் ஜூலை 14-*

*தஞ்சை வடக்கு மாவட் டம், கும்பகோணத்தில் உள்ள 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த வாணிவி லாச சபாவின் சார்பில் முத் தமிழறிஞர் கலைஞர் அவர் களின் 101வது பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்க ளுக்கு கலைஞர் அவர்க ளின் திரைக்கதை வசனத் தில் வெளியான, பராசக்தி திரைப்படம் இலவசமாக திரையிடப்பட்டது.*

*இந்நிகழ்வில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந் தரம் எம்.பி, கும்பகோணம் மாநகரச் செயலாளர் துணைமேயர் சு.ப.தமிழழ கன், மாவட்டக் கழகப் பொருளாளர் என்.நடரா ஜன், மண்டலக்குழு தலை வர் கே.என்.எஸ்.ஆசை தம்பி, சபா பொருளாளர் இ.மகேந்திரன்,*

*சபாவின் துணை கூடுதல் செயலாளர் கே.கே.எஸ். ராஜா, நாடக நிர்வாகி செந் தில் குமார், துணை நாடக நிர்வாகி தனராமன், மாவட்ட சார்பு அணி நிர் வாகிகள் க.செந்தில் குமார், டி.ஆர்.அனந்தராமன், எஸ்.முருகன், முனைவர் மு.மூர்த்தி, பு.காளிதாஸ், வழக்கறிஞர்கள் பா.விஜயக் குமார், ராஜ்மேகன்ராஜ், கவிதா உள்ளிட்ட வாணி விலாச சபாவின் நிர்வாகி கள், தி.மு.க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், அரசு/நகராட்சி/ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, கையடக்கக் கணினிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 11.07.2024 அன்று வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) கூ.சண்முகம், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.